இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 15.01.2026

# பழசை மறந்த பழனிசாமி!

இலட்சக்கணக்கான அரசு ஊழியர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களை பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இதனை எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ‘தேர்தல் நேரத்தில் அரசு ஊழியர்களை ஏமாற்றுகிறார் முதலமைச்சர். அவர்கள் ஏமாற்றப்பட்டதை பின்னர் தெரிந்து கொள்வார்கள்’ என்று புலம்பல் அறிக்கையை வெளியிட்டுள்ளார் பழனிசாமி.

**அரசு ஊழியர்களின் 22 ஆண்டு கோரிக்கையான பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்தி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். மாநில அரசு அலுவலர்கள் பெற்ற கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும் என்றும், ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால் அவர் ஏற்கெனவே பரிந்துரைத்த குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும் என்றும், ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்படும்** என்றும் அறிவித்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

அரசு ஓய்வூதியம் என்பது அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஓய்வுக்குப் பிறகும், அவர்கள் வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டிய சமூக பாதுகாப்பு என்பதை உறுதி செய்துள்ளார் முதலமைச்சர். தமிழ்நாடு அரசு பழைய ஓய்வூதியத் திட்டத்தை ஏற்பதன் மூலம் ஓய்வூதியப் பங்களிப்புக்குச் செலுத்த வேண்டிய கூடுதல் பங்களிப்பு தொகையாக ரூ.13 ஆயிரம் கோடியும், பணியாளர்கள், ஆசிரியர்கள் நலனுக்காக அரசுப் பங்களிப்பாக ரூ.11 ஆயிரம் கோடியும் ஆக ரூ.24 ஆயிரம் கோடி நிதிச்சுமையை தமிழ்நாடு அரசு ஏற்றுள்ளது.

**“எங்கள் ஓய்வு கால வாழ்க்கை அர்த்தமுள்ளதாக முதலமைச்சர் மாற்றி உள்ளார். இன்றைய அறிவிப்பின் மூலம் 6.5 லட்சம் பேர் வாழ்க்கையில் முதலமைச்சர் ஒளியேற்றி வைத்திருக்கிறார்”** என்று அரசு ஊழியர் சங்கத்தினர் சொல்லி இருக்கிறார்கள். செய்ய முடியாது என்று சொல்லப்பட்டதை செய்து காட்டி இருக்கிறார் முதலமைச்சர்.

**எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, இதனைப் பாராட்டி இருக்க வேண்டும். வரவேற்று இருக்க வேண்டும். மாறாக வயிற்றெரிச்சல் அறிக்கைகளை தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். இந்த அறிவிப்பு வந்தபோதும் அறிக்கை வெளியிட்டார். அரசாணை வரும் போதும் அறிக்கை வெளியிடுகிறார். இன்றைய தினம் அரசு ஊழியர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் பழனிசாமி, தனது ஆட்சி காலத்தில் அரசு ஊழியர்களை எவ்வளவு கேவலப்படுத்தினார் என்பதை அரசு ஊழியர்கள் மறந்திருக்க மாட்டார்கள். பழசை பழனிசாமி மறந்திருக்கலாம். அரசு ஊழியர்கள் மறக்க மாட்டார்கள்.**

தொடக்கப் பள்ளிஆசிரியர் வாங்கும் சம்பளத்தைக் குறிப்பிட்டு “இவ்வளவு சம்பளமா?” என இழிவுபடுத்தியவர்தான் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி. அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் பார்த்து, “அதிக சம்பளம் வாங்கும் நீங்கள் போராடலாமா?” என்று கேட்டவர்தான் பழைய பழனிசாமி.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கூட்டமைப்பான ஜாக்டோ -ஜியோ 2019 ஜனவரியில் போராட்டத்தை நடத்தியது. அ.தி.மு.க. அமைச்சர் ஜெயக்குமார், அரசு ஊழியர்களை மிரட்டினார். “கோரிக்கையை ஏற்க முடியாது. பணிக்குத் திரும்பாவிட்டால் நடவடிக்கை பாயும். அரசுஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தர, மக்களிடம் கூடுதல் வரி விதிக்க வேண்டி வரும்” என்று சொன்னார் அ.தி.மு.க. அமைச்சர் ஜெயக்குமார்.

அரசு ஊழியர் போராட்டம் நடந்து கொண்டிருந்த போது 2019 ஜனவரி 27 ஆம் நாள் அனைத்து நாளிதழ்களிலும் முக்கால் பக்கத்துக்கு அமைச்சர் ஜெயக்குமாரின் பெயரில் விளம்பரம் வெளியிட்ட அரசுதான் இந்த பழனிசாமி அரசு. அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான சம்பள பட்டியலை வெளியிட்டு, இது தமிழக அரசின் வரி வருவாய் தொகையில் 70 சதவீதம் என்று தெரிவித்திருந்தார் ஜெயக்குமார். `பிற தனியார் நிறுவனத்தைக் காட்டிலும் அதிகச் சம்பளத்தை அரசு ஊழியர்கள் பெறுகின்றனர். தனியாரைவிட அரசு ஊழியர்கள் அதிகச் சம்பளம் வாங்குகிறார்கள் அவர்களுக்கு எதற்குப் போராட்டம்?’ எனக் கொச்சைப்படுத்தியவர்தான் இந்த பழனிசாமி.

போராட்டம் நடத்திய 85 ஆயிரம் அரசு ஊழியருக்கு விளக்க விசாரணைக் கடிதம் அனுப்பியவர்தான் இந்த பழனிசாமி. ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள்மீது குற்றக் குறிப்பாணை கள் (17B), இடமாற்றம், பணியிடைநீக்கம், வழக்கு போன்ற ஒடுக்கு முறைகளை ஏவியவர்தான் இந்தப் பழனிசாமி.

பழனிசாமியின் ‘அம்மா’ ஜெயலலிதா அரசு ஊழியர்களை என்ன பாடு படுத்தினார் என்பது எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மறக்க முடியாத காயங்கள் ஆகும்.

24.7.2001 அன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற அரசு ஊழியர்கள் சங்கக் கட்டிடத் திறப்பு விழாவில் முதலமைச்சர் ஜெயலலிதா பேசும்போது, **“அரசுக்குக் கிடைக்கின்ற மொத்த வரி வருவாயில் 94 சதவிகிதம் அரசு ஊழியர்களுக்கே செலவாகிறது”** என்று சொன்னார்.

2002ஆம் ஆண்டு அக்டோபர் 28ஆம் தேதி அன்று, **“மொத்த மக்கள் தொகையில் 2 சதவிகிதமே உள்ள அரசு ஊழியர்களுக்கு 94 சதவிகிதம் செலவு என்றால், மீதி உள்ள 6 சதவிகித வருவாயில் வளர்ச்சிப் பணிகளுக்கு என்ன இருக்கிறது”** என்று சொன்னவரும் அதே ஜெயலலிதா தான்.

அரசு அலுவலர்கள் போராட்டத்தை ஒடுக்குவதற்காக புதிய சட்டம்கொண்டு வரப்பட்டதும் ஜெயலலிதா ஆட்சியிலேதான். இந்தச் சட்டத்தை மீறி வேலை நிறுத்தம் செய்பவர்கள் மற்றும் அதைத் தூண்டுபவர்கள் ஆகியோருக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை அல்லது ரூபாய் 5000 அபராதம் அல்லது இரண்டும் விதிக்க சட்டத்தில் வகை செய்யப்பட்டதும் அ.தி.மு.க. ஆட்சியிலே தான்.

தமிழக அரசு அலுவலர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 23.10.2002 அன்று முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்தார்கள். போராட்டத்தை ஒடுக்கும் வகையில் அரசு அலுவலர் சங்கத் தலைவர்களை இரவோடு இரவாக எஸ்மா சட்டத்தின்கீழ் கைது செய்ய உத்தரவிட்டவர் ஜெயலலிதா. அரசு ஊழியர்களின் வீடுகளுக்குள் புகுந்து காவல் துறையினர் கைது செய்தார்கள். போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்களை விசாரணை நடத்தாமல் டிஸ்மிஸ் செய்யும் எஸ்மா சட்டத்தை 04.07.2003ல் பிறப்பித்தார் ஜெயலலிதா. 200க்கும் மேற்பட்ட அரசு ஊழியர் சங்கங்களின் அங்கீகாரத்தை ரத்து செய்தவர் ஜெயலலிதா.

எஸ்மா சட்டத்தின்படி தமிழ்நாடு முழுவதும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் என 1 லட்சத்து 70 ஆயிரம் பேரை ஒரே உத்தரவின் பேரில் கூண்டோடு டிஸ்மிஸ் செய்த கொடூரத்தின் உச்சத்தை நிகழ்த்திக் காட்டியவர் ஜெயலலிதா.

**2001-ம் ஆண்டு, 1.20 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் - 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்கள் - 10 ஆயிரம் சாலைப் பணியாளர்களை ஒரே நேரத்தில் வேலையைப் பறித்த கொடூரக் காட்சிகள் ஜெயலலிதா ஆட்சி காலத்தில்தான் நடந்தது.**

ஆசிரியர், அரசு அலுவலர் போராட்டத்தில் கலந்துகொண்டு மறியலில் ஈடுபட்ட பொள்ளாச்சி நம்பியமுத்தூர் பள்ளி தலைமை ஆசிரியர் காசிப்பாண்டியன் தனது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தீக்குளித்து மாண்டார். தேனி மாவட்டம், பெரியகுளம் மாவட்டத்தைச் சேர்ந்த தேவதானப்பட்டி மஞ்சளாறு அணைப்பகுதியில் ஆசிரியராகப் பணியாற்றி கொண்டிருந்த அப்துல் சத்தார் அ.தி.மு.க. அரசின் அராஜகத்தைக் கண்டித்து தற்கொலை செய்து கொண்டார். இவை எல்லாம் ஜெயலலிதா ஆட்சி காலத்து நிகழ்வுகள் ஆகும்.

**இப்படி அரசு ஊழியர்களை வேட்டையாடிய ஆட்சிதான் அ.தி.மு.க. ஆட்சியாகும்.**



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் – அவரது இல்லத்தில், கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் முன்னிலையில், நேற்று முன்தினம் (13.1.2026 – செவ்வாய்க்கிழமை) ‘முரசொலி’ தயாரித்துள்ள ‘தைத் திங்கள் முதல் நாள் – தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் சிறப்பு மலர் – 2026’யை ‘முரசொலி’ செய்தியாசிரியர் கு.சேது வழங்கி வாழ்த்துப் பெற்றார். உடன் ‘முரசொலி’ பொது மேலாளர் எஸ்.இராஜசேகரன் உள்ளார்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

## “உலகம் உங்கள் கையில்” திட்டம் - மடிக்கணினிகள்!

### மாணவர்களுக்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

பெரம்பலூர், ஜன.15-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக கல்லூரி இறுதியாண்டு பயிலும் 10 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கும் “உலகம் உங்கள் கையில்” என்னும் மாபெரும் திட்டத்தை சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்திலிருந்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியினை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலையில், வேப்பூர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இருந்து, நேரலையில் பார்வையிட்டு, பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 1,473 மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ.21,650 வீதம் மொத்தம் ரூ.3.19 கோடி மதிப்பீட்டிலான மடிக்கணினிகள் வழங்கும் பணியினை தொடங்கி வைக்கும் வகையில் வேப்பூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 265 மாணவிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கி பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

பின்னர் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, மாணவர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, தமிழ் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், முதல் தலைமுறை பட்டமளிப்பு (FG) திட்டம், போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டம், சமூகநீதி விடுதிகள், நான் முதல்வன் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டங்களின் தொடர்ச்சியாக மாணவர்கள் நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப, டிஜிட்டல் திறன் பெற “உலகம் உங்கள் கையில்” என்னும் அறிவூட்டும் கருப்பொருளின் கீழ் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு 20 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிவிப்பின்படி இந்த திட்டம் மாநிலம் முழுவதும் இரண்டு கட்டங்களாக நிறைவேற்ற திட்டமிடப்பட்டு, முதல் கட்டமாக 10 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் துணை முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் இன்று சென்னையில் இருந்து தொடங்கி வைத்துள்ளார்கள்.

கல்வி அனைவருக்கும்! உயர்வு ஒவ்வொருவருக்கும்! என்ற நோக்கத்துடன் தொழில்நுட்ப அறிவியலை வலுப்படுத்த டெல் (DELL), ஏசர் (ACER), ஹெச்பி (HP) போன்ற உலக தரமான நிறுவனங்களின் மடிக்கணினிகள் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படுகின்றது. மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த மடிக்கணினிகளில் Intel i3 / AMD Ryzen 3 Processor, 8 GB RAM, 256 GB SSD நினைவகம், Windows 11 Home Strategic மற்றும் BOSS Linux OS ஆகிய மென்பொருள்கள் முன்னதாக நிறுவப்பட்டுள்ள நிலையில் நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் திட்ட பணிகளுக்காக MS Office 365, மேலும் “அறிவைத் தேடும் இளைய தலைமுறைக்கு புதிய சாளரம்” என அமையும் செயற்கை நுண்ணறிவு மென்பொருளான Perplexity Proவின் 6 மாத சந்தாவும் கட்டணம் இல்லாமல் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் உயர்தர மடிக்கணினி பையும் வழங்கப்படுகிறது.

அரசு வழங்கும் விலையில்லா மடிக்கணினிகள் கல்வி வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும், சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் நேரடி ஆதாரமாக உதவுகின்றன. டிஜிட்டல் திறன் மேம்பாடு மூலம் மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்துறை (IT), மென்பொருள் உருவாக்கம் (Software Development), தரவு உள்ளீடு (Data Entry), டிஜிட்டல் சந்தைப்படுத்துதல் (Digital Marketing), வரைகலை வடிவமைப்பு (Graphic Designing), குறியிடுதல் (Coding), வலை வடிவமைப்பு (Web Designing), செயற்கை நுண்ணறிவு கருவிகள் (AI Tools), சுயாதீன வேலை (Freelancing) போன்ற துறைகளில் வாய்ப்புகளை பெறும் புதிய தலைமுறை என்ற அளவில் தகுதியானவர்களாக மாணவர்களை மாற்றிட உதவுகிறது. இதனால் குடும்ப வருமானம் உயர்ந்து, கிராம நகர இடைவெளி குறைந்து, தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு, புதிய தொழில் முயற்சிகளும் உருவாகும் வாய்ப்பு அமையும். இத்திட்டம், கல்வி மூலம் சமூக மேம்பாடு; தொழில்நுட்ப மூலம் பொருளாதார முன்னேற்றம்; என்பதையும், “உலகம் உங்கள் கையில்” என்ற தமிழ்நாட்டின் மாபெரும் டிஜிட்டல் கனவையும் நினைவாக்கும் வரலாற்று பெருமைகள் சேர்க்கும் மாபெரும் கல்வி புரட்சித் திட்டமாகும்.

எனவே மாணவ, மாணவிகள் இதனை பயன்படுத்திக் கொண்டு நன்கு கல்வி பயின்று வாழ்க்கையில் முன்னேற வேண்டும். இத்திட்டத்தை நமது பெரம்பலூர் மாவட்டத்தில் நமது வேப்பூர் மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தொடங்கி வைப்பதில் கூடுதல் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், அட்மா தலைவர் சி.ராஜேந்திரன், கல்லூரி முதல்வர் முனைவர் மணிமேகலை ஜெயபால், குன்னம் வட்டாட்சியர் சின்னத்துரை, வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அறிவழகன் மற்றும் பேராசிரியர்கள் மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஜல்லிக்கட்டு தடைக்கு எதிரான போராட்ட வழக்கு!

### அமைச்சர் முனைவர் கோவி.செழியன், சு.கல்யாணசுந்தரம் எம்.பி., சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. நீதிமன்றத்தில் ஆஜர்!

தஞ்சாவூர், ஜன.15-

தஞ்சாவூர் சிறப்பு நீதிமன்றத்தில் ஜல்லிக்கட்டு தடைக்கு எதிரான போராட்ட வழக்கில் அமைச்சர், மாநிலங்களவை உறுப்பினர், சட்டப்பேரவை உறுப்பினர் ஆஜராகினர்.

ஜல்லிக்கட்டு போட்டி தடைக்கு எதிராகவும், மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்தும் தமிழகம் முழுவதும் போராட்டம் நடைபெற்றது. இதையொட்டி, கும்பகோணத்தில் 2017, ஜனவரி 20ஆம் தேதி ரயில் மறியல் போராட்டம், ஆர்ப்பாட்டத்தில் தற்போதைய மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் தலைமையில் கழக நிர்வாகிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து தற்போதைய உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், சு.கல்யாணந்தரம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் உள்ளிட்டோர் மீது கும்பகோணம் மேற்கு காவல் நிலையத்தினர் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கு தஞ்சாவூரிலுள்ள நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறுகிறது.

இதில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், சு.கல்யாண சுந்தரம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் ஆகியோர் ஆஜராகினர். இந்த வழக்கு விசாரணை முடிவடைந்ததால் ஜனவரி 19ஆம் தேதி தீர்ப்பு வழங்கப்படும் என நீதிமன்ற தரப்பில் கூறப்படுகிறது.



திருச்சியில் உள்ள கழக முதன்மைச் செயலாளர் அலுவலகத்தில் முதன்மை செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என். நேரு முன்னிலையில் லால்குடி புள்ளம்பாடி ஒன்றியத்தில் உள்ள ஆலம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த சுமார் 50 இளைஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர். புள்ளம்பாடி ஒன்றியச் செயலாளர் இளங்கோவன் உடன் உள்ளார்.